

தஞ்சை தெற்கு மாவட்டம், சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் சூர்யா வெற்றிக்கொண்டான் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட பொறுப்பாளர் பழனிவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, உள்ளிட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, கிளைக் கழக, சார்பு அணிகளின் நிர்வாகிகள், கட்சியினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில், பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

*தஞ்சாவூர், பிப்.18 -*

தஞ்சாவூர் தெற்கு மாவட்டம், சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றிய தி.மு. கழகத்தின் சார்பில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் பூக்கொல்லை கடைவீதியில் பொதுக்குழு உறுப்பினர் அ.தனபால் தலைமையில் நடைபெற்றது.

சேதுபாவாசத்திரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மு.கி. முத்துமாணிக்கம் வரவேற்றார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் என். அசோக்குமார் எம்.எல்.ஏ முன்னிலை வகித்தார். இதில், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் வீ.ஜெயபிரகாஷ், தொகுதி பார்வையாளர் சு.ப.சரவணன், மாவட்ட அவைத் தலைவர் சுப.சேகர், ஒன்றியச் செயலாளர்கள் வை. ரவிச்சந்திரன், கோ. இளங்கோவன், சோம. கண்ணப்பன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக, சார்பு அணிகளின் நிர்வாகிகள், கட்சியினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதில் தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் பழனிவேல், கழக சட்டத் துறை துணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் கலந்து கொண்டு பேசினார். மாநில கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி சிறப்புரை யாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், ஜெயலலிதா அம்மையார் ஊழலில் சம்பாதித்ததை நீதிமன்றம் பிடுங்கி ஏலத்தில் விடக்கூடிய நிலை இன்றைக்கு உள்ளது. அது தான் அண்ணா தி.மு.க. அவர்கள் நம்மை பார்த்து குறை சொல்கிறார்கள். சூர்யா வெற்றிகொண்டான் பேசும்போது, முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் வைத்திலிங்கத்தை குறை சொல்லி பேசினார். அப்படி எல்லாம் சொல்லக்கூடாது. பாவம் அவர் நம்ம ஆள், யார் எப்ப நம்ம பக்கம் வருவார்கள் எனத் தெரியாது.

நாளைக்கே நமது பக்கம் வந்தாலும் வந்து விடுவார். யாரையும் ஆவேசமாக திட்டுவதற்கு பயமாக உள்ளது. காரணம் என்னவென்று கேட்டால் அடுத்த நாள் நம்ம பக்கம் வந்து விடுகிறார்கள். எனவே சூர்யா வெற்றி கொண்டான் அவசரப்பட்டு யாரையும் ஆவேசமாக பேசி விடாதீர்கள். அண்ணா தி.மு.க. நால் ரோடு முகத்திலே நிற்கிறது. யார் தலைவர், யார் பொதுச் செயலாளர், யாருக்கு சின்னம் என்று தெரியாத நிலை உள்ளது. அ.தி.மு.க. தொண்டர்கள் ஒன்றும் தெரியாத நிலையில் உள்ளனர்.

**ஒற்றுமையாக பணியாற்றுங்கள்!**

மக்களை மதிக்க வேண்டும், மக்களே மதிக்கிறீர்களோ இல்லையோ கட்சிக்காரர்களை முதலில் மதியுங்கள். அது ஒன்றே போதும், கட்சிக்காரன் குறை சொன்னால் பத்து ஓட்டு போகும். மேடையில் இருக்கும் எல்லோருக்கும் நான் சொல்கிறேன். மந்திரிகளை வைத்தே நான் பேசியிருக்கிறேன், ஏன் தலைவரை வைத்தே நான் பேசியிருக்கிறேன். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நமக்குள் தானே பேசுகிறோம். இந்தியாவில் இருக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் இல்லாத வலிமையும் பலமும் தி.மு.க.வுக்கு உள்ளது. நம்முடைய கட்சிக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நிற்க வேண்டும். இருக்கக்கூடிய 10 மாதங்கள் நெருக்கடி எல்லாம் தருவார்கள். நமக்குள் உள்ள குழப்பங்களால் தான் பிரச்சினை ஏற்படுகிறது. நாம் ஒற்றுமையாக இருந்தால் ‘எவன்’ தயவும் தேவையில்லை.”

இவ்வாறு அவர் பேசினார்.

நிறைவாக ஒன்றிய துணைச் செயலாளர் கே காமராஜ் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டையில் சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி. சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர்!

*புதுக்கோட்டை பிப்.18-*

புதுக்கோட்டை மாநகராட்சி, கீழ 3ஆம் வீதியில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 15.02.2025 அன்று திறந்து வைத்து, மாணவர்களுக்கு விடுதியில் தங்குவதற்கான அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்கள்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், மாணாக்கர்களுக்கான விடுதி வசதிகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், சிறுபான்மையினர் மாணவர்களின் நலனுக்காக 2024 2025 ஆம் கல்வியாண்டிற்கு, புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 மாணவர்கள் தங்கும் வகையில் ரூ.56 லட்சம் மதிப்பீட்டில் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த விடுதியானது, போதக காப்பாளர், சமையலர், சமையலர், காவலர்/ ஏவலர், துப்புரவு பணியாளர் உள்ளிட்ட பல்வேறு பணியாளர்களுடன் சிறப்புடன் செயல்பட உள்ளது. இந்தப் புதிய விடுதி பயன்பாட்டிற்கு வந்ததன் மூலம் இவ்விடுதியினை பயன்படுத்தும் மாணவர்களுக்கு நிறைந்தது மனம்.

எனவே, மாணவர்கள் அனைவரும் இந்த விடுதியினை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு சிறப்பான முறையில் கல்வி பயில வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மையின மக்களின் நலன் காத்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை பயனாளிகளிடம் விரைவாக கொண்டு சேர்த்திடும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், சிறுபான்மையினர் நல கல்லூரி மாணவர் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதியில் உள்ள தங்கும் அறை, சமையலறை, உணவு உண்ணும் அறை உள்ளிட்டவற்றை மாணவர்கள், பணியாளர்கள் அனைவரும் தூய்மையான முறையில் பராமரித்திடவும், மாணவர்களுக்கு உரிய காலமுறைப்படி உணவுகளை வழங்கிடவும் தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே, இவ்விடுதியினை நல்ல முறையில் பயன்படுத்தி மாணவர்கள் கல்வி பயின்றிட வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மேலும், புதிதாக கட்டப்படும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலக வளாகத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA) உள்ளிட்ட மாவட்ட நிலை அலுவலகங்கள் செயல்பட உள்ளன. இந்த கட்டிடத்தினை, சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்கள் சிறந்த முறையில் கட்டி, பொதுமக்கள் அரசு அலுவலர்களை எளிய முறையில் அணுகிடும் வகையிலும், காற்றோட்டமான சூழ்நிலையுடனும், உறுதித் தன்மையுடனும் கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) பொறியாளர் பரமசிவம், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கே.ஸ்ருதி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த. சந்திரசேகரன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி, மாமன்ற உறுப்பினர் லதா கருணாநிதி மற்றும் க.நைனாமுகமது மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவினர் அரசு மாணவர்கள் தங்கும் விடுதிகள், ஏழை, எளிய மக்களுக்கு வழங்கும் அடுக்குமாடி குடியிருப்புகள் போன்று கோவையில் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.



கழக மூத்த முன்னோடி மறைந்த மு.சுலைமான் அவர்களின் மூத்த மகனும்,கோவை மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ் அவர்களின் அண்ணன் அபு(எ) சையது அபுதாஹிர் மறைவையொட்டி, அவரது இல்லத்திற்கு, கழக துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. நேரில் சென்று, மாநகர் மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ் அவரது தம்பி மு.சு.சித்திக், பாபு மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார். கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் கழக கழக மாநில நிர்வாகிகள் டாக்டர் கோகுல் , அம்பாள் நந்தகுமார், பகுதி செயலாளர்கள் வி.ஐ.பதுருதீன், கேபிள்மணி வட்டக்கழக செயலாளர் ஏ.அப்பாஸ், என்.ஜே.முருகேசன் ஒன்றிய செயலாளர் சுரேந்திரன், லாராபிரேம்தேவ், விக்னேஷ்வரன், எஸ்.எம்.எஸ்.சுதாகர், லேனாரஹீம், சுஜித் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆறுதல் தெரிவித்து கொண்டனர்.




தி.மு.க.
இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்**
**புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக திருப்பத்தூர் & காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | திருப்பத்தூர் | எஸ்.ஆர்.கே.கன்வென்ஷன் ஹால், ஈத்கா ரோடு, (வடமலை பவன் பின்புறம்) திருப்பத்தூர். |
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-02-2025




# மதுரை மேற்குத் தொகுதியை மீட்டெடுப்போம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி உறுதி!

*மதுரை, பிப். 18-*

மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றதில் மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுப்போம் என்றும் வரும் 23ஆம் தேதி தொகுதியின் பொது உறுப்பினர்கள் கூட்டம் வெகு சிறப்பாக நடைபெறும் எனவும் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு:-

மதுரை வடக்கு மாவட்டத்தில் மதுரை மேற்கு தொகுதி சேர்க்கப்பட்டதை தொடர்ந்து வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி மதுரை மேற்கு தொகுதி கழக நிர்வாகிகளை சந்தித்து பல்வேறு ஆலோசனைகள் நடத்தினார்

இதை தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் கூறுகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் அரசை தமிழ்நாடு மக்கள் பாராட்டக்கூடிய வகையில் நடத்தி வருகிறார், கழக அரசின் சாதனைகள் எல்லோராலும் பாராட்டு பெற்று வருகிறது, தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னிடம் மதுரை மேற்கு தொகுதியை ஒப்படைத்துள்ளார், அவரது நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் மதுரை மேற்கு தொகுதியை மீட்டெடுத்து தலைவர் அவர்களிடம் ஒப்படைப்பேன்.

மேலும் மதுரை மேற்கு தொகுதியில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வரும் 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் விளங்குடி ஏபிடி கம்பெனி அருகே முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுவதாக தெரிவித்தார்.

கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன், பகுதி செயலாளர்கள் அன்பழகன், மதிவெங்கடேஷ், காவேரி, தவமணி, சுதன், ஒன்றிய செயலாளர் ஆர்.கே.ஜெயராமன், பேரூர் செயலாளர் ராஜாமணி, மாநில அணிகளின் நிர்வாகிகள் அக்ரி கணேசன், ஆர்.கணேசன், வீரகணேசன் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்



அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை சேர்ந்த கிக் பாக்ஸிங் வீராங்கனைகள், டெல்லியில் நடைபெற்ற சர்வதேச கிக் பாக்ஸிங் போட்டியில் கலந்துகொண்டு தொடர்ந்து மூன்று முறை தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனை அக்ஷயா, மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை எழில் பாத்திமா ஆகியோரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் சந்தித்து வாழ்த்தினார்.உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வீராங்கனைகள் பலரும் கலந்துகொண்டனர்.